DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 238/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திரு.சீனிவாசககண்ணன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது சங்கரன்கோவில் போக்குவரத்து காவல்துறையில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் நகர் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது 27.11.2012ம் தேதி காலை 9.15 மணிக்கு நானும், காவலர் அய்யாத்துரை என்பவரும் சங்கரன்கோவில் நகர் காவல்நிலையக்குற்ற எண்.646/2012 வழக்கு விசாரணையில் காவல்நிலைய உதவி ஆய்வாளருக்கு உதவியாக சங்கரன்கோவில் ரோந்து பணியில் இருந்தபோது சங்கரன்கோவில் பழைய பேருந்து நிலையம் ராஜபாளையம் பேருந்து நிற்கும் மார்க்கத்தில் கையில் பிளாஸ்டிக் சாக்குடன் நின்றுகொண்டிருந்த எதிரி ரவி என்ற கார்த்திக்குமார் என்பவரை போலீஸ் பார்ட்டிாகிய எங்களை கண்டதும் ஓட எத்தணித்தவரை பிடித்து விசாரித்தபோதும், அவர் வைத்திருந்த பையை சோதனை செய்தபோதும் அதில் 2 பித்தளை குத்துவிளக்குகள் இருந்தன. மேற்படி எதிரியை

பிடித்து வழக்கு சொத்தை கைப்பற்றுவதற்கு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டபோது நானும் உடன் இருந்து கையொப்பம் செய்தேன். என்னை உதவி ஆய்வாளர்விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

27.11.2012 ம் தேதி எனது காவல்நிலைய உயரதிகாரியின் உத்தரவின்பேரில்தான் ரோந்து பணிக்கு சென்றேன் என்றால் சரிதான். மேற்படி ரோந்து பணி செய்வதற்காக எனக்கு எழுத்துபூர்வமான உத்தரவு வழங்கப்பட்டதா அல்லது வாய்மொழியாக கூறப்பட்டதா என்றால் எழுத்துபூர்மான உத்தரலவு வழங்கப்பட்டது. எங்கள் காவல்நிலையத்தில் பராமரிக்கப்படும் பொது நாட்குறிப்பேட்டில் நாங்கள் ரோந்து பணிக்காக சென்ற விபரம் எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த பொதுநாட்குறிப்பேட்டில் மேற்படி ரோந்து பணிக்காக சென்றது பற்றிய விபரம் குறித்த பதிவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரிக்கு எதிராக இவ்வழக்கு பொய்யாக பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**